# பல்லடம் தோழர் பொன்னுச்சாமி உண்ணா விரதம்.

1-6-38 முதல் சென்னை தியாகராய நகரில் கனம் முதன் மந்திரி வீட்டுக்கெதிரில் உண்ணா நோன்புடன் சத்தியாக்கிரகம் செய்துவரும் தோழர் பொன்னுச்சாமி மிக உறுதியுடன் இருக்கிறார். ஆனால் வெயில், காற்று, மழைகளில் இருந்து வருவதால் இளைப்புடன்காணப் படுகிறார். அவருக்குப் பக்கத்தில் ஒரு குடத்தல் குடிப்பதற்காகத் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கிறது. கயிற்றுக் கட்டிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னைய இரவைப் போலவே 2-6 38 இரவிலும் கடுமழைபெய்தது. இரவு முழுதும் தோழர் அவர்கள் மழையில் நனைந்தார். அவருக்கு அருகில் சி. ஐ. டி. களும் போலீஸ்காரரும் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். பொது ஜனங்களும் தோழர்களும் அவரை வந்து பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். நேற்று ராவ்பகதூர் எம். ராமன் அவர்களும் இன்று காலை தலைவர் மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களும வந்து பார்த்து விட்டுச் சென்றார்கள்.